நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி. V. பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 1358/2026
CNR No.TNTH020022212026

மணிகண்ட பாண்டி (21/2026),
த/பெ. சோழ பாண்டியன் ....மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் ஆய்வாளர்,
தேனி காவல்நிலையம்
குற்ற எண். 328/2026
சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 115(2), 118(1), 351(3) BNS
....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றை தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராகேஷ் ஹர்ஷன்,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

மனுதாரர் இம்மனுவை பிரிவு 480 BNSS–வின் கீழ் தேனி காவல்நிலையம் குற்ற எண். 328/2026, சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 115(2), 118(1), 351(3) BNS வழக்கிலிருந்து பிணைகோரி தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது. அதில் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், தலைமறைவு எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்கினால் மீண்டும் இதுபோன்ற அடிதடி வழக்குகளில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவு ஆகக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் பதிலினை பரிசீலித்தும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, அதில் இவ்வழக்கு

புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், இவ்வழக்கின் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரியின் மீதான குற்றம் சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழான கடுமையான குற்றம் என்பதாலும், மேலும் காவல்துறை தரப்பில் எழுத்துப்பூர்வமான பதில் அறிவிப்பிலும், இவ்வழக்கில், தலைமறைவு எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதாலும், தொடர்ந்து இதேபோன்று அடிதடி குற்ற செயல்களில் எதிரி ஈடுபட்ட வாய்ப்புள்ளது என்று கூறியதை கருத்தில் கொண்டும், எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை களைக்க கூடும் என்பதாலும், சட்டப்பிரிவுகள் 118(1), 351(3) BNS– ஆகியவை பிணை விடா குற்றம் என்பதாலும், இச்சூழ்நிலையில், பிணை மனு ஏற்க தக்கது அல்ல என இந்நீதிமன்றம் முடிவுசெய்து இப்பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து இன்று 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.02 16:23:08 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.